ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2239/22 - 2021 අගෝස්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2021.08.03
*2239/22 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*சப்பிரகமுவ மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்*

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 184.(1)(i) மற்றும் 184(1அ)(அ) ஆகிய உட்பிரிவுகளின் கீழான கட்டளை***

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1அ) உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், சப்பிரகமுவ மாகாண ஆளுநர் ஆகிய நான், எம்பிலிபிட்டிய நகர சபையின் தவிசாளர் திரு. வவுலன்பொக்க கமகே லலித் தர்மகீர்த்தி அவர்களால் 255 ஆம் அத்தியாயமாகிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள எவையேனும் தவறுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றி மூன்று மாத (03) கால எல்லைக்குள் விசாரணை செய்து என்னிடம் அறிக்கையிடுவதற்காக 2021.01.15 ஆந் திகதிய 2210/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் நியமனம் செய்யப்பட்ட தனி நபர் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வாதித் தரப்பின் சாட்சிகளைக் கவனத்திற்கொண்டதன் பின்பு தனி நபர் விசாரணை ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் தீர்ப்புகளுடன் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள 2021.07.06 ஆந் திகதிய இறுதி அறிக்கையின் பிரகாரம்,*

*திரு. வவுலன் பொக்க கமகே லலித் தர்மகீர்த்தி அவர்கள் எம்பிலிபிட்டிய நகரசபையின் தவிசாளர் என்ற வகையில் அப்பதவியில் பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1)(இ), 184(1)(ஈ) மற்றும் (உ) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் செய்துள்ளார் என்பதற்குப் போதியளவு சாட்சிகள் உள்ளன என நான் திருப்தியடைகின்றமையினால்,*

1A - PG 5517 — 25 (2021/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1)(i) மற்றும் 184(1ஆ)(ஆ) ஆகிய உட்பிரிவுகளின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், எம்பிலிபிட்டிய நகர சபையின் தவிசாளர் திரு. வவுலன் பொக்க கமகே லலித் தர்மகீர்த்தி அவர்களை 2021.08.03 ஆந் திகதி தொடக்கம் எம்பிலிபிட்டிய நகர சபையின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கம் செய்கின்றேன்.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
*சப்பிரகமுவ மாகாண ஆளுநர்.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*2021, ஓகத்து 03.*

*08 - 190*